செ.வெ.எண் : 176/2020 நாள் : 26.02.2020

**அய்யா வைகுண்டசாமி பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு உள்ளூர் விடுமுறை - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் அய்யா வைகுண்டசாமி பிறந்த நாள் விழா 03.03.2020 (செவ்வாய்கிழமை) அன்று நடைபெறுவதால் 03.03.2020 (செவ்வாய்கிழமை) அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

**(2)** 03.03.2020 (செவ்வாய்கிழமை) அன்று அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக 2020 ஏப்ரல் மாதத்தில் நான்காவது சனிக்கிழமை (25.04.2020) அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வேலை நாளாக இருக்கும்.

**(3)** 03.03.2020 (செவ்வாய்கிழமை) அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைமைக் கருவூலம் மற்றும் கிளைக் கருவூலங்கள் அரசு ஈடுபாடு சம்பந்தப்பட்ட அவசரப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு, தேவையான பணியாளர்களைக் கொண்டு இயங்கும் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.